வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஒன்று வரப்போவதாகவும், அதற்கு மத்திய அரசின் அங்கீகாரம் கிடைத்திருக்கிறது என்றும் ஒரு நல்ல செய்தியைத் தெரிவித்திருக்கிறார்கள். தமிழகத்தில் அநேக மாவட்டங்களில் பல்கலைக் கழகங்கள் ஏற்படுத்தப்பட்டிருக் கின்றன. தமிழ்ப்பல்கலைக் கழகம் வந்திருக்கிறது. பாரதியார் பல்கலைக்கழகம் வந்திருக்கிறது. ஆனால் எங்களுடைய மாவட்டமான வட ஆற்காடு மாவட்டத்தில் இல்லை என்ற குறை இருக்கிறது. ஆகவே தயவுசெய்து மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர் களும் வேளாண்மைப் பல்கலை கழகத்தை வட ஆற்காடு மாவட்டத்திலே கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். இதுபோன்ற ஒரு கருத்து ஏற் கெனவே இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, அரிசி ஆலைகளைப் பொறுத்தவரைக்கும் மின் கோட்டா என்று வைத்து குறைந்த அளவுக்கு அரைக்கப்படும் என்று சொல்லி இருக்கிறார்கள். 20,25 எச்.பி. என்ற குறைந்த அளவிலே உள்ளவைகளுக்கு கோட்டா சிஸ்டம் என்று கொண்டு வராமல் 25 எச்.பி.க்கும் அதிகமாக உள்ளவர்களுக்குக் கொண்டு வந்து மற்றவர்களுக்கு விதிவிலக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 31-1-1983 அன்று திங்கட்கிழமை பேரவை காலை, மாலை இரண்டு வேளை யும் கூடும். பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 31-1-1983 காலை 9மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1,32 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

125 தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு கள் விதிகள் மற்றும் தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு சாராய (சில்லறை விற்பனைக் கடை கள்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 29-3-1982 ஆம் தேதியிடப்பெற்ற மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறையின் 216 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937)54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

126. பண்ணை முதல்வர் தனியுரிமைக்கூறு விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து15-4-81ஆம்தேதியிடப்பெற்ற வன மீன் துறையின் 439 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1882 ஆம் ஆண்டு வனச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 5/1882) 64 ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.)

(ஆ.) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

எதுவுமில்லை